# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

## முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

**Under Section 173 BNSS** 8069075

1. District மாவட்டம் : சென்னை
   PS: காவல்நிலையம் : சென்னை நகரபிரிவு-3 ஊ.த.(ம)க.துறை
   Year: ஆண்டு : 2025 FIR No.: மு.த.அ. எண் : 01 Date: நாள் : 19.02.2025

2. (i) Act சட்டம்: ஊழல் தடுப்புச் சட்டம்-1988ன் Sections பிரிவுகள்: 7
   (ii) Act சட்டம்: ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம்-2018 Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
   Date from : நாள் முதல் : 12.02.2025 at 06.40 hrs.
   Date to : நாள் வரை : 15.02.2025 at 1530 hrs.
   Time Period : நேர அளவு
   Time from : நேரம் முதல்
   Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் : 19.02.2025 Time நேரம் : at 0800 hrs.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக : கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டது

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் : சுமார் 17 Kms. வடகிழக்கு
   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address : முகவரி : கே4 அண்ணாநகர் போக்குவரத்து புலனாய்வுப்பிரிவு, சென்னை
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
   District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் : J. வின்சென்ட் செல்வகுமார்
   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் : ஜான் பீட்டர்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு : 1978
   (d) Nationality : நாட்டினம் : இந்தியன்
   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்
   Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் : கார் ஓட்டுநர்
   (g) Address : முகவரி : எண் 3/16, சிவன் கோயில் தெரு, தச்சூர் கிராமம், பஞ்செட்டி (போஸ்ட்) பொன்னேரி தாலுகா, திருவள்ளூர் மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திரு. லட்சுமண பெருமாள், உதவி ஆய்வாளர், அண்ணாநகர் போக்குவரத்து புலனாய்வுப்பிரிவு, சென்னை.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   தாமதமில்லை

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-2T.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

— இல்லை—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

J. [signature]
19-02-2025

S. Vallinayagam 19.02.2025

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer-in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

19.02.2025

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் (S.VALLINAYAGAM)
Rank: நிலை INSPECTOR OF POLICE ..........No. எண் ..........
VGAC, CC-III Chennai-16.

Inspector of Police
Vigilance and Anti-Corruption
Chennai City-III
Alandur, Chennai-600 016

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை சென்னை நகரப்பிரிவு-3 குற்ற எண்.01/AC/2025/CC-III சட்டப்பிரிவு 7 ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம் 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையில் வரிசை எண்.12யின் தொடர்ச்சி பின்வருமாறு

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது : 19.02.2025ந்தேதி காலை 0800 மணியளவில், சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப்பிரிவு-3 காவல் ஆய்வாளர் சு.வள்ளிநாயகம் ஆகிய நான், மேற்சொன்ன அலுவலகத்தில் நான் பணியில் இருந்தபோது, திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தாலுகா, பஞ்செட்டி போஸ்ட், தச்சூர் கிராமம், சிவன் கோயில் தெரு, எண்.3/16 என்ற முகவரியில் வசித்து வரும் திரு.ஜா.வின்சென்ட் செல்வகுமார், த/பெ.ஜான் பீட்டர், என்பவர் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப்பிரிவு-3 அலுவலகம் வந்து, காவல் ஆய்வாளர் ஆகிய என்னிடம் தட்டச்சு செய்த எழுத்து மூலமான புகார் மனுவை கொடுத்தார். நான் அந்த புகார் மனுவை பெற்று சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தலைமையகத்திற்கு தகவல் தெரிவித்து, புகார் மனு சம்பந்தமாக இரகசிய விசாரணை மேற்கொண்டேன். புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள SI திரு.லட்சுமணபெருமாள், சென்னை பெருநகர காவல் (மேற்கு) அண்ணாநகர் போக்குவரத்து புலனாய்வுப்பிரிவு மற்றும் புகார்தாரர் திரு.ஜா.வின்சென்ட் செல்வகுமார் ஆகியோரின் முன் நடத்தையும், புகார்மனுவின் உண்மைதன்மையும் இரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டது. எனது ரகசிய விசாரணையில் புகார் மனுவில் குற்றச்சாட்டிற்கான முகாந்திரம் இருப்பதால், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை உயர் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்து, அவர்களின் அனுமதி பெறப்பட்டு இப்புகார் மனுவின் தன்மைக்கேற்ப இன்று 19.02.2025ந்தேதி காலை 09.30 மணிக்கு சட்டப்பிரிவு-7, ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம் 2018யின்படி SI திரு.லட்சுமணபெருமாள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. புகாரின் விவரம் பின்வருமாறு : அனுப்புனர் ஜா.வின்சென்ட் செல்வகுமார், த/பெ.ஜான் பீட்டர், எண்.3/16, சிவன் கோயில் தெரு, தச்சூர் கிராமம், பஞ்செட்டி (போஸ்ட்), பொன்னேரி தாலுகா, திருவுள்ளூர் மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்புத் துறை, ஆலந்தூர்,

சென்னை. அய்யா, நான், திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி அருகே உள்ள பஞ்செட்டி போஸ்ட் தச்சூர் கிராமத்தில் எண்.3/16 என்ற முகவரியில் உள்ள வீட்டில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் சென்னை அயனாவரத்தை சேர்ந்த திரு.ஜெரால்டு என்பவருக்கு சொந்தமான டாடா இண்டிகோ (வண்டி பதிவு எண்.TN-18-AL-0150) என்ற நான்கு சக்கர வாகனத்தை வாடகைக்கு ஓட்டி வருகிறேன். மேலும் நான்கு சக்கர வாகனத்தில் கஸ்டமர்கள் அழைத்து செல்வதன் மூலம் கிடைக்கும் வருமானத்தில் கார் ஓனர் திரு.ஜெரால்டு என்பவருக்கு பணம் ரூ.650/- தினமும் கொடுத்து விடுவேன். நான் கடந்த 04.01.2025ந்தேதி மாலை சுமார் 5.30 மணியளவில் நியு ஆவடி ரோட்டில் சென்னை பெருநகர குடிநீர் டிப்போ பனிமனை-101 அலுவலகம் அருகே பாடி மேம்பாலம் நோக்கி காரை ஓட்டி வந்தபோது, எனக்கு எதிர் திசையில் இரண்டு சக்கர வாகனத்தை வேகமாக ஓட்டி வந்த பெண் ஒருவர், நான் ஓட்டி வந்த காரின் வலது பக்க முன்புறத்தில் மோதி அந்த பெண் கீழே விழுந்ததில், அவருக்கு கை மற்றும் இடது காலில் காயங்கள் ஏற்பட்டது. பின்னர் இரண்டு சக்கர வாகனத்தில் வந்த நபர் சென்னை அயனாவரம் பகுதியை சேர்ந்த சுகந்தி என்பவரின் மகள் திவ்யதர்ஷனி என்பது தெரியவந்தது. விபத்து தொடர்பாக தகவல் தெரிந்து வந்த சென்னை அண்ணாநகர் போக்குவரத்து புலனாய்வுபிரிவை சேர்ந்த போலீசார், விபத்து நடைபெற்ற இடத்தில் என்னை விசாரித்தனர். விபத்தில் காயமடைந்த திவ்யதர்ஷனி என்பவர் அருகே உள்ள மருத்துவமனைக்கு சென்றிருப்பதாக தெரிவித்தேன். மேலும் விபத்து தொடர்பாக, காயமடைந்தவரின் தாய் சுகந்தி என்பவர் கொடுத்த புகாரின் பேரில் கடந்த 05.01.2025ந்தேதி சென்னை (மேற்கு) அண்ணா நகர் போக்குவரத்து புலனாய்வுப்பிரிவு SI திரு.லட்சுமணபெருமாள் அவர்கள் குற்ற எண்.02/2025யின்படி TN-18-AL-0150 car driver ஆன என் மீது வழக்கு பதிவு செய்தார்கள். பின்னர் SI திரு.லட்சுமணபெருமாள் அவர்கள் எனது ஒரிஜினல் டிரைவிங் லைசென்ஸ் மற்றும் நான் வாடகைக்கு ஓட்டி வரும் டாடா இண்டிகோ என்ற நான்கு சக்கர வாகனத்தின் (வண்டி பதிவு எண்.TN-18-AL-0150) ஒரிஜினல் ஆர்.சி. புக் ஆகியவற்றை வாங்கி

வைத்து கொண்டார். பின்னர் விபத்தில் தொடர்புடைய எனது நான்கு சக்கர வாகனத்தையும் (வண்டி பதிவு எண்.TN-18-AL-0150) மற்றும் இரண்டு சக்கர வாகனத்தையும், அயனாவரம் ஆர்.டி.ஓ. ஆபிஸில் வாகன ஆய்விற்கு சென்னை (மேற்கு) அண்ணா நகர் போக்குவரத்து புலனாய்வுப்பிரிவு போலீசார் 09.01.2025ந்தேதி WSI தனபாக்கியம் மூலம் ஆஜர் செய்தார்கள். அயனாவரம் ஆர்.டி.ஓ. ஆபிஸின் பிரேக் இன்ஸ்பெக்டர் அன்றைய தேதியிலேயே இரண்டு வாகனங்களையும் பரிசோதனைக்கு உட்படுத்தினார். பரிசோதனைக்கு பின் எனது வாகனம் விடுவித்ததை தொடர்ந்து நான் வழக்கம்போல் எனது பணிகளை தொடர்ந்தேன். இதற்கிடையில் 11.01.2025ந்தேதி காலை சுமார் 11.45 மணியளவில் மதுரை மாவட்டம், ஜெய்ஹிந்த்புரம் உள்ள எனது தூரத்து உறவினர் சடாட்சரம் இறந்து விட்டதாக எனது செல்போன் எண்ணிற்கு (8428371984) எனக்கு தெரிந்த நபர் திரு.தர்மராஜ் என்பவர் தொடர்பு கொண்டு தகவல் கொடுத்தார். நான் 11.01.2025ந்தேதி சென்னையிலிருந்து மதுரைக்கு புறப்பட்டு சென்றேன். இறந்த நபரின் 16வது நாள் காரியம் முடிந்தபின், நான் 27.01.2025ந்தேதி இரவு சுமார் 10.30 மணியளவில் மதுரையிலிருந்து புறப்பட்டு மறுநாள் 28.01.2025ந்தேதி காலை சென்னைக்கு வந்தடைந்தேன். SI திரு.லட்சுமணபெருமாள் அவரது செல்போன் (9444605467) எண்ணிலிருந்து எனது செல்போன் எண்ணிற்கு (8428371984) தொடர்பு கொண்டதாக 28.01.2025ந்தேதி காலை சுமார் 6.50 மணியளவில் மிஸ்டு கால் ஆக எனது செல்போனில் இருந்தது. நான் SI திரு.லட்சுமணபெருமாள் அவர்களை அவரது செல்போன் எண்ணிற்கு அன்றைய தினமே காலை சுமார் 07.30 மணிக்கு தொடர்பு கொண்டு பேசியபோது, SI Station formality தொடர்பாக தனது ஆபிஸில் வந்து தன்னை பார்க்கும்படி கூறினார். எனக்கு வைரல் காய்ச்சல் மற்றும் வயிறு உபாதை கோளாறு ஆகியவற்றால் உடல்நிலை பாதிக்கப்பட்டதால், நான் 29.01.2025ந்தேதி முதல் 02.02.2025ந்தேதி வரை வேலைக்கு செல்லாமல் ஓய்வில் இருந்ததால் SI திரு.லட்சுமணபெருமாள் அவர்களை நேரில் போய் பார்க்கவில்லை. பின்னர் 03.02.2025ந்தேதி மதியம் சுமார் 02.30 மணியளவில் அண்ணாநகர் காவல்

நிலைய கட்டிடத்தில் 2வது மாடியில் இயங்கி வரும் சென்னை (மேற்கு) அண்ணா நகர் போக்குவரத்து புலனாய்வுப்பிரிவு அலுவலத்திற்கு SI திரு.லட்சுமணபெருமாள் அவர்களை நேரில் சந்திக்க சென்றேன். அப்போது அந்த அலுவலகத்தில் பணிபுரியும் WSI தனபாக்கியம் SI திரு.லட்சுமணபெருமாள் அவர்கள் லீவில் உள்ளதாக தெரிவித்தார். அந்த அலுவலகத்தில் பணிபுரியும் காவலர் திரு.விஜயகுமார் அவர்களும் SI சார் லீவில் உள்ளதாக கூறினார். பின்னர் நானும் SI சார் வந்ததும் அவரை நேரில் போய் பார்த்து விவரம் தெரிந்து கொள்ளலாம் என இருந்து விட்டேன். 12.02.2025ந்தேதி காலை சுமார் 06.40 மணியளவில் 8754858808 என்ற செல்போன் எண்ணிலிருந்து எனது செல்போன் எண்ணிற்கு (8428371984) தொடர்பு கொண்டு பேசிய SI திரு.லட்சுமணபெருமாள், என்னிடம் ஸ்டேஷன் பார்மாலிட்டி வந்து முடிக்க மாட்டியா என்றும் உனக்கு மனசாட்சியே இல்லையா என்றும், எனது ஒரிஜினல் டிரைவிங் லைசென்ஸ் மற்றும் நான்கு சக்கர வாகனத்தின் ஒரிஜினல் ஆர்.சி. புக் ஆகியவற்றை திரும்ப என்னிடம் கொடுப்பதற்கு தனக்கு தனியாக பணம் ரூ.15,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டும் என மிரட்டும் வகையில் பேசினார். நான் ஓட்டி வரும் நான்கு சக்கர வாகனம் ரிப்பேர் ஆகியதால் அதை சரிசெய்ய வேண்டியிருந்ததால் உடனே SI சாரை போய் பார்க்கமுடியவில்லை. பின்னர் நான் 15.02.2025 அன்று பிற்பகல் சுமார் 03.30 மணிக்கு அண்ணாநகர் காவல் நிலைய கட்டிடத்தில் 2வது மாடியில் இயங்கி வரும் சென்னை (மேற்கு) அண்ணா நகர் போக்குவரத்து புலனாய்வுப்பிரிவு அலுவலகத்தில் SI திரு.லட்சுமணபெருமாள் அவர்களை நேரில் சந்தித்து எனது ஒரிஜினல் டிரைவிங் லைசென்ஸ் மற்றும் ஆர்.சி. புக் தொடர்பாக பேசினேன். அப்போது அவர் நான் கேட்ட பணத்தை கொடுத்தால்தான் ஒரிஜினல் டிரைவிங் லைசென்ஸ் மற்றும் நான்கு சக்கர வாகனத்தின் ஒரிஜினல் ஆர்.சி. புக் ஆகியவற்றை தரமுடியும் என கறாராக கூறிவிட்டார். என்னால் அவ்வளவு பணம் கொடுக்கமுடியாது என்றேன். அதற்கு SI திரு.லட்சுமணபெருமாள் சார் பணம் ரூ.10,000/- தனக்கு தனியாக கொடுக்கும்படி வற்புறுத்தினார். அதற்கு நான் வரும் வருமானத்தில்

தான் குடும்பத்தையும் மற்றும் இதர செலவினங்களையும் பார்த்து வருகிறேன். என்னால் அவ்வளவு பணம் கொடுக்கமுடியாது என்றதும், SI திரு.லட்சுமணபெருமாள் சார் மனசாட்சிப்படி நடந்துக்கோ முதல் தவணையாக பணம் ரூ.5000/- எடுத்துக்கொண்டு வரும் புதன்கிழமை மதியம் 1 மணிக்குள் வந்து என்னை பார்க்க சொன்னார். எனக்கு லஞ்சப்பணம் கொடுத்து, எனது ஒரிஜினல் டிரைவிங் லைசென்ஸ் மற்றும் நான்கு சக்கர வாகனத்தின் ஒரிஜினல் ஆர்.சி. புக் ஆகியவற்றை வாங்குவதற்கு விருப்பம் இல்லை. எனவே தெரிந்தவர்களிடம் விசாரித்ததில் லஞ்சஒழிப்பு துறையில் புகார் செய்யலாம் என்று கூறினார்கள். எனக்கு, பல்வேறு அத்தியாவசியப் பணிகள் இருந்ததால் அவற்றை முடித்துவிட்டு இன்று 19.02.2025ந்தேதி உங்கள் அலுவலகம் வந்து இந்த புகார் மனுவை கொடுக்கிறேன். நான் SI திரு.லட்சுமணபெருமாள் அவர்கள் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.5,000/- கொண்டு வந்துள்ளேன். எனது ஒரிஜினல் டிரைவிங் லைசென்ஸ் மற்றும் நான்கு சக்கர வாகனத்தின் ஒரிஜினல் ஆர்.சி. புக் ஆகியவற்றை கொடுப்பதற்கு லஞ்சம் கேட்ட சென்னை (மேற்கு) அண்ணா நகர் போக்குவரத்து புலனாய்வுப்பிரிவு SI திரு.லட்சுமணபெருமாள் என்பவர் மீது தகுந்த சட்ட நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன் இப்படிக்கு (ஒம்) J.வின்செண்ட் செல்வகுமார் 19.02.2025

Sir, I received the above complaint on 19.02.2025 at 08.00 hrs.at my office and had discreet verification over the antecedents of the accused and bonafide of the complainant and after getting concurrence from the higher officers of the Directorate, I registered a case in V&AC Chennai City-III Cr.No.01/2025 u/s 7 of Prevention of Corruption Act, 1988 as amended in 2018 on this day 19.02.2025 at 09.30 hrs and taken up for investigation. Sd/- (S.VALLINAYAGAM), INSPR OF POLICE,V&AC, CC-III, Chennai.

இவ்வழக்கின் அசல் முதல் தகவல் அறிக்கை மற்றும் அசல் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகளை விசாரிக்கும் மாண்புமிகு சிறப்பு நீதிமன்றம், (ஊழல் தடுப்புச்சட்டம்) சென்னை அவர்களுக்கு அனுப்பியும், பிற நகல்களை சம்பந்தப்பட்ட உரிய உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.

S.Vallinayagam
(S.VALLINAYAGAM)
INSPR OF POLICE
V&AC, CC-III, Chennai

Inspector of Police
Vigilance and Anti-Corruption
Chennai City-III
Alandur, Chennai-600 016